www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11Zoo

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

# வகுப்பு 11

## விலங்கியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

**சரியான விடையைக் குறியீட்டுடன் எழுதவும்:** **10×1=10**

1) தசை நார்களின் செயல் அலகு ...............

அ) ஆக்டின் ஆ) சார்கோமியர் இ) மையோசின் ஈ) சார்கோபிளாசம்

2) அசிட்டாபுலம் அமைந்துள்ள பகுதி ...............

அ) தொடை எலும்பு ஆ) தோள்பட்டை எலும்பு

இ) இடுப்பு எலும்பு ஈ) காரை எலும்பு

3) நமது உடலில் காணப்படும், மிக நீண்ட, மிகப்பெரிய மற்றும் மிக உறுதியான எலும்பு ...............

அ) வாலெலும்பு ஆ) தொடை எலும்பு

இ) சிற்றெலும்புகள் ஈ) இஸ்கியம்

4) **கூற்று** : சோடியம், பொட்டாசியம் மற்றும் புரதம் போன்றவற்றின் சமநிலையற்ற தன்மை ஓய்வுநிலை மின்னழுத்ததை உண்டாக்குகிறது.

**காரணம்** : சோடியம், பொட்டாசியம், சமநிலையற்ற தன்மையைச் சரிசெய்ய நரம்புசெல் மின்னாற்றலை பயன்படுத்திக் கொள்கிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றைச் சரியாக விளக்குகிறது.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

5) **கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.**

அ) இயக்க நரம்பு - உட்செல்லுதல்

ஆ) உணர்வு நரம்பு - வயிற்றுப்புறம்

இ) இயக்கு நரம்பு - முதுகுப்புறம்

ஈ) உணர்வு நரம்பு - உட்செல்லுதல்

6) கீழ்வருவனவற்றுள் எந்த ஹார்மோன் பிட்யூட்டரி சுரப்பியின் தாக்கத்தினால் சுரப்பது இல்லை?

அ) ஈஸ்ட்ரோஜன் ஆ) தைராக்ஸின்

இ) இன்சுலின் ஈ) குளுக்கோ கார்டிகாய்டுகள்

7) நோய்த்தடைக் காப்புடன் தொடர்புடைய சுரப்பி எது?

அ) பாரா தைராய்டு சுரப்பி ஆ) தைமஸ் சுரப்பி

இ) பீனியல் சுரப்பி ஈ) அட்ரினல் சுரப்பி

8) இரத்தச் சிவப்பணுக்களை நீக்கச் செய்யும் திரவம்

அ) டர்க்ஸ் திரவம் ஆ) டாய்ஸான் திரவம்

இ) ஃபீனால் திரவம் ஈ) ஹேயம்ஸ் திரவம்

9) **சரியான இணையைத் தேர்வு செய்து எழுதுக:**

அ) நியூட்ரோஃபில் = 60-70%

ஆ) இயோசினோஃபில் = 75 - 90%

இ) பேசோஃபில் = 68%

ஈ) மோனோசைட் = 12% - 16%

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

10) கீழ்கண்டவற்றுள் தொகுதி I ல் கொடுக்கப்பட்டுள்ள ஹார்மோன் சுரப்பு நோய்களையும், தொகுதி II ல் கொடுக்கப்பட்டுள்ள தகுந்த குறைபாட்டு ஹார்மோனையும் பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| P) | அக்ரோமெகாலி | i) | பாராதைராய்டு |
| Q) | மிக்ஸிடீமா | ii) | அட்ரீனல் சுரப்பி |
| R) | டெட்டனி | iii) | தைராய்டு சுரப்பு குறைவு |
| S) | அடிசன் நோய் | iv) | வளர்ச்சி ஹார்மோன் அதிகரிப்பு |

அ) P-(iv), Q-(iii), R-(i), S-(ii)
ஆ) P-(iv), Q-(i), R-(ii), S-(iii)
இ) P-(i), Q-(ii), R-(iii), S-(iv)
ஈ) P-(iv), Q-(ii), R-(iii), S-(i)

## பகுதி - II

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5×2=10

11) ஒரு பேஸ்மேக்கர் என்ன செய்கிறது?
12) கோலி சிஸ்டோகைனின் பணிகள் இரண்டினைக் கூறுக.
13) அக்ரோமெகலியின் அறிகுறிகளை எழுதுக.
14) குருட்டுப்புள்ளி எனப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
15) மனிதரில் கார்னியா மாற்று சிகிச்சை பொதுவாக நிராகரிக்கப்படுவதில்லை. ஏன
16) நல்ல மணம் ஒருவரை சமையலறை நோக்கிச் செல்லத் தூண்டியது. இதில் உணவை அடையாளம் கண்டு உணர்வு தூண்டலை உண்டாக்கும் மூளை பகுதி எது?
17) சமநீளச்சுருக்கம் எவ்விதம் நடைபெறுகிறது?
18) பல்வகை இயக்கங்களின் பெயர்களைக் கூறுக.

## பகுதி - III

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**கேள்வி எண் 26க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 5×3=15

19) அச்சுச் சட்டகத்தில் அடங்கியுள்ள மூன்று முக்கியப் பகுதிகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
20) எலும்புத் தசைகளிலுள்ள சுருங்கு புரதங்களின் பெயர்களைக் கூறுக.
21) அனிச்சை செயல் என்றால் என்ன?
22) டெக்டோரியல் படலம் என்றால் என்ன? அதன் பயன் யாது?
23) லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது? அதன் பகுதிகளைக் கூறு
24) ADH ஹார்மோன் டையபெட்டிஸ் இன்சிபிடஸ் நோயோடு உள்ள தொடர்பை எழுதுக.
25) மீஸ்னரின் துகள்கள் என்றால் என்ன?
26) ஸ்டெத்தஸ்கோப்பின் மருத்துவ முக்கியத்துவம் மூன்றினை கூறுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3×5=15

27) எலும்புமுறிவு ஏற்படும் விதம் மற்றும் எலும்புமுறிவு குணமாதல் பற்றி விவரி.

**(அல்லது)**

தொடர் உடற்பயிற்சி செய்வதன் நன்மைகள் யாவை?

28) குச்சி மற்றும் கூம்பு செல்களை வேறுபடுத்துக.

**(அல்லது)**

நியூரானின் அமைப்பை படத்துடன் விவரி.

29) சிறுநீரகம் ஒரு நாளமில்லாச் சுரப்பியாக எவ்வாறு செயல்படுகிறது என்பதை விவரி.

**(அல்லது)**

MRI செயல்படும் விதத்தை விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com